


**29.03.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும்** ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. **நாட்டில் தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க** மத்தியஅரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. **தமிழ்நாடு காவல்துறை, தீயணைப்புத்துறை சார்பில்** 103 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சிதிட்ட பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று துவக்கி வைத்தார்.

4. **தமிழ்நாட்டில்** சாதனை அளவாக இந்த ஆண்டு 62 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப் பட்டுள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

5. **ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர்** இறுதியாட்டத்தில் இந்தியாவின் அனிரூத் சந்திரசேகர், ஸ்பெயினின் **David** இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும்** ஒருங்கிணைய வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி.திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்

புதுதில்லியில் இன்று தேசிய சுற்றுச்சூழல் மாநாட்டை தொடங்கிவைத்து பேசியஅவர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

தேசிய பசுமைத் தீர்வாயம் ஏற்பாடு செய்துள்ள இந்த 2 நாள் மாநாட்டில் சுற்றுச்சூழலை பாதுகாக்க பருவநிலை மாற்றம், மாசு கட்டுப்படுத்துதல், பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சி ஆகிய 4 முக்கிய பிரிவுகளில் வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்கள், கொள்கை வகுப்பாளர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்கவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ், கார்பன் உமிழ்வை முற்றிலும் குறைக்க மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

2030-ம் ஆண்டிற்குள் உலகளவில் 3-வது பெரிய எரிசக்தி உற்பத்தி செய்யும் நாடாக இந்தியாவை உருவாக்குவதை குறிக்கோளாக கொண்டு அரசு செயல்படுவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**மன் கி பாத்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய** வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 120-வது முறையாக நாளை நாட்டு மக்களிடையே தமது எண்ணங்களை பகிர உள்ளார்.

தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, Airnews இணையதளம், Newsonair செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**இதனிடையே பிரதமர் மஹாராஷ்டிர மாநிலம்** நாக்பூரில் சோலார் பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனத்தில் வெடிமருந்து சோதனை தளம் **UAV** ஓடுதள வசதியை நாளை திறந்து வைக்கிறார்.

பிலாஸ்பூரில் 33 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் முடிவுற்ற பணிகளை தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து சட்டீஸ்கட் செல்லும் பிரதமர் இப்பிராந்தியத்தில் கல்வி கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 29 மாவட்டங்களில் 130 பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் அடுத்த** ஆண்டு மார்ச் இறுதிக்குள் நக்சல் தீவிரவாதத்தை நாட்டிலிருந்து அடியோடு ஒழிக்க உறுதிபூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சட்டீஸ்கட் மாநிலம் சுக்மாவில் பாதுகாப்பு படையினரால் 16 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதோடு, அவர்களிடமிருந்து ஏராளமான தானியங்கி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதை அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதங்களும், வன்முறையும் மாற்றத்தை கொண்டுவர முடியாது என கூறிய அமைச்சர், அமைதியும், வளர்ச்சியும் மட்டுமே மாற்றத்தை கொண்டுவரும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே 2 நாள் பயணமாக இன்று பீஹார் செல்லும் அமைச்சர், பாட்னாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை இன்று சந்தித்து பேசுகிறார்

நாளை மாநில அளவிலான கூட்டுறவுத்துறை மாநாட்டை அவர் தொடங்கிவைக்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**பியூஷ் கோயல்**

உலக சந்தையில் இந்தியாவில் தயாரிக்கும் பொருட்களுக்கு அதிக வரவேற்பு உள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய அவர், அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல் கணித துறையில் அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகளை உலகளவில் இந்தியா உருவாக்குவதாக கூறினார்.

நீதித்துறை மற்றும் நீதியை விரைந்து வழங்குவதில் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

**மியான்மர்**

**மியான்மர்** நாட்டில் நேரிட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

மீட்பு மற்றும் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அந்நாட்டிற்கு முதல்கட்டமாக 15 டன் அளவிலான நிவாரண பொருட்களை இந்தியா அனுப்பிவைத்துள்ள நிலையில், மேலும் 2 விமானப்படையின் விமானங்கள் நிவாரணப் பொருட்களுடன் புறப்படுகின்றன.

மீட்புக்குழுவும், மருத்துவ குழுவும் இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்

அங்குள்ள நிலைமையை அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், மேலும் தேவையான உதவியை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**ஆளுநர்**

நாட்டில் மகளிர் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

திருச்சி இந்திய மேலாண்மை கல்வி கழகத்தின் 13-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், இளைஞர்கள் உடல், அறிவு, ஆன்மீக ரீதியாக தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

பொருளாதாரத்தில் மிகவும் வேகமாக வளரும் நாடாக இந்தியா உள்ளதாகவும், 25 கோடி மக்கள் கடந்த 10 ஆண்டுகளில் வறுமையிலிருந்து மீண்டுள்ளதாகவும் கூறினார்.

கிராமப்புற பெண்கள் பொருளாதார வளர்ச்சியில் முக்கியபங்கு வகிப்பதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 457 மாணாக்கருக்கு ஆளுநர் பட்டங்களை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தமிழ்நாடு காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறை** சார்பில் 102 கோடியே 67 லட்ச ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் காணொலி மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் காவல்துறை சார்பில் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள், தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை சார்பில் நீர்த்தாங்கி வண்டிகள் வாகங்களின் சேவையை தொடங்கிவைத்தார்.

மேலும் இத்துறைகளின் சார்பில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், தீயணைப்பு பணியாளர்களுக்கான 45 குடியிருப்புகள் உள்ளிட்டவற்றையும் திறந்துவைத்தார்.

தொடர்ந்து ஆதிதிராவிட பழங்குடியினர் கண்காணிப்பு குழு கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் ஆதிதிராவிட பழங்குடியினர் மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை எடுத்துரைத்தார்.

.. **வாய்ஸ்** ..

கடந்த 4 ஆண்டுகளில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 421 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**இதனிடையே உகாதி பண்டிகை நாளை** கொண்டாடப்படுவதை ஒட்டி தெலுங்கு, கன்னட மொழிபேசும் மக்களுக்கு முதலமைச்சர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை அறுசுவை பச்சடி, மாவிலை தோரணம், வண்ண கோலத்துடன் எழுச்சியோடு வரவேற்க வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**சக்கரபாணி**

**தமிழ்நாட்டில் முதன்முறையாக அதிதிறன் நேரடி நெல்** கொள்முதல் நிலையம் தஞ்சை மாவட்டம் பஞ்சநதி கோட்டை கிராமத்தில் இன்று திறந்துவைக்கப்பட்டுள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இம்மையத்தை இன்று திறந்துவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டால் டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி பிற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்றார்.

ஒருமணி நேரத்திற்கு 15 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யும் நிலையில், ஒருகோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பில் இம்மையம் கட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

நெல் ஈரமாக இருந்தாலும் உலர்த்தி கொள்முதல் செய்யப்படும் என்றும், இம்மையத்தின் மூலம் 10 மடங்கு கூடுதலாக கொள்முதல் செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மாநிலம் முழுவதும் சாதனை அளவாக இந்த ஆண்டு 62 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

**அமைச்சர்கள்**

**சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு** உட்பட்ட பகுதியில் பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பில் புதிய பல்நோக்கு மையம் அமைப்பதற்கான இடத்தை மாநில அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.மா.சுப்ரமணியன், திரு.சேகர்பாபு ஆகியோர் இன்று ஆய்வுசெய்தனர்.

வருவாய் துறைக்கு சொந்தமான 7 ஏக்கர் நில பரப்பளவில் இம்மையம் அமைக்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖

**எடப்பாடி கே. பழனிச்சாமி**

**தமிழகத்தில் திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு** சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாநிலத்தில் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இதனைத் தடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறைகூறினார்.

❖❖❖❖❖❖❖

**திருவண்ணாமலை வாய்ஸ்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் பிரதமரின் ஜல்ஜீவன் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களின் வாழ்க்கைதரம் மேம்பட்டுள்ளதாக பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுசுகாதாரத்துறையில்** காலிபணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைபொருள்** தடுப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி அழகு மீனா இன்று தொடங்கிவைத்தார்.

**நாமக்கல் மாவட்டம் கே-ஆப்டெக்ஸ் விற்பனை** நிலையத்தில் ரமலான் பண்டிகையை முன்னிட்டு 3 நாள் சிறப்பு தள்ளுபடி விற்பனையை ஆட்சித்தலைவர் டாக்டர் உமா இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர்** இறுதியாட்டத்தில் இன்று இந்தியாவின் அனிரூத் சந்திரசேகர், ஸ்பெயினின் **David Vega Hernandez** இணை - ஃபிரான்ஸ், பிரேசில் இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல்.** 20-20 **கிரிக்கெட் போட்டியில்** அஹமதாபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு குஜராத் டைட்டன்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**